அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 16/2018

எனது இலக்கம் : 75/10/III ෙපාදු (II ஆம் தொகுதி)

அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.07.10

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபை பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்

# இலங்கை நிர்வாக சேவை அலுவலர்களை பதவிகளுக்கு நியமித்தல் / இடமாற்றம் செய்தல்

இலங்கை நிர்வாக சேவையின் I ஆம் தரத்துடைய மற்றும் அதற்கு உயர் தரத்தில் உள்ள அலுவலர்களை பதவிகளுக்கு நியமித்தல் / இடமாற்றம் செய்தல் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது உரிய ஆவணங்கள் மற்றும் தகவல்களை முழுமையற்றதாக சமர்ப்பிப்பதன் மூலம் ஏற்படும் தாமதங்கள் மற்றும் தேவையற்ற வகையில் சொத்துக்கள் வீணாகுவதனை தடுத்துக் கொளவதற்காக, பின்வரும் அனைத்து ஆவணங்கள், தங்களது அவதானங்கள் மற்றும் பரிந்துரைகளுடன் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கும் வகையில் எனக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

I. அலுவலரை சேவையில் இருந்து விடுவிப்பதற்காக தற்போதைய சேவை நிலையத் தலைவரின் உடன்பாடு
II. அலுவலரை சேவையில் இணைத்துக் கொள்வதற்காக புதிய சேவை நிலையத் தலைவரின் உடன்பாடு
III. குறித்த அலுவலரின் விருப்பம்
IV. தழுவல் கடிதம் உட்பட முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினரின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று (அமைச்சின் திருத்தங்கள் மற்றும் பதவிக்கு நியமனம் செய்யும் திகதிக்கு ஏற்ப அதற்கு உரித்தான பணியாட்தொகுதியினரின் அங்கீகாரத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்)
V. சரியாக பூரணப்படுத்தப்பட்ட EST -12 மாதிரிப் படிவம்
VI. அலுவலரின் தேசிய அடையாள அட்டையின் சான்றுப்படுத்திய தெளிவான பிரதியொன்று
VII. அலுவலர் தொடர்பாக காணப்படும் ஒழுக்காற்று நடவடிக்கை பற்றிய தகவல்கள்

02. மேலும் குறித்த அலுவலர் மேற்படி பதவியில் கடமையினைப் பொறுப்பேற்றதன் பின்னர் முறையான நியமனக் கடிதத்தினை வெளியிடுவதற்காக கடமையினைப் பொறுப்பேற்றுக் கொண்டமைக்கான கடிதத்தின் பிரதியொன்றினையும் சமர்ப்பிக்குமாறு, மேலும் அறிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்./ பத்மசிரி ஜயமான்ன
செலாளர்
அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு